# குரூரக் குண்டு வீச்சில் அறுவர் ஸ்தல பலி;

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 176 புதன் 08-08-1990 (ஆடி 23) முஹர்ரம் 16

## ஒருவர் உடல் சிதறியது

நேற்றுக் காலை யாழ்நகர் மீது வை-12 விமானம் தொடர்ந்து மிகப்பெரும் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதில் ஆறுபேர் ஸ்தலத்திலேயே பலியாகினர். அத்தியடி அம்பலவாணர் வீதியில் வீசப்பட்ட இருகுண்டுகளினால் ஐந்துபேர் ஸ்தலத்திலேயே பலியாகியதோடு ஆறுபேர் படுகாயமடைந்தனர். அப்பகுதியில் உள்ள முப்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. இப்பகுதியில் இதேவிமானம் மூன்றாவது தடவையாக குண்டு வீசியுள்ளது. இறந்த ஒருவரது உடல் சின்னாபின்னமாகியிருந்தது. அடையாளம் காணப்படவில்லை, இக்குண்டு வீச்சுத்தாக்குதலில் டிராக்டர் சாரதிஒருவரும், வண்டி ஓட்டுநர் ஒருவரும் வீட்டில் தங்கியிருந்த ஒருவரும் உட்படஐவர் ஸ்தலத்திலேயே பலியாகினர். — 4ஆம் பக்கம் பார்க்க

★ குண்டுவீச்சு விமானங்களின் ஒன்பது மணி நேர

# ஏககாலத் தாக்குதல்களால்

# யாழ். நகர் நேற்று அதிர்ந்தது

## நகரம் ஸ்தம்பித்தது; மக்கள் வெளியேற்றம்

நேற்று நகரிலும் சூழவுள்ள பகுதிகளிலும் குக்கிராமங்களிலும் வை-12 இராட்சத விமானம், அவ்ரோ, பொம்மர், ஹெலிகள் நடத்திய ஏககால அதிவேகத்தாக்குதல்கள் மக்களின் உதிரத்தை உறைய வைத்தன.

இதைப் போன்ற தாக்குதல்கள் முன்னெப்போதும் நிகழ்ந்ததில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றின் விளைவாக நூற்றுக்கணக்கான வீடுகள் கட்டிடங்கள் சேதமுற்றன. பல உயிர்கள் பறிக்கப்பட்டன.

ஒன்பது மணிநேரமாக விட்டு விட்டு நடாத்தப்பட்ட குண்டுவீச்சினால் நகரில் சகல அரச அலுவலகங்களும் ஸ்தம்பிதமடைந்தன போக்குவரத்துகள் காலை எட்டரைமணியுடன்நிறுத்தப்பட்டுவிட்டன.

யாழ். நகரை மையமாகக் கொண்டு விமானங்கள் குண்டுகளை பொழிந்ததால் நகரை அண்டியுள்ள மக்கள் அவசர அவசரமாக மூட்டை முடிச்சுகளுடன் பீதியுடன் இடம்பெயர்ந்ததை மாலைவரை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (ஸ்ரீ)

## கோப்பாயிலும் கொடூரம்

## நோயாளர்களும் பதுங்குகுழியில் அடைக்கலம் தேடினர்

கோப்பாய் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஹெலி தாக்குதலில் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையையும் அதனைச் சூழவுள்ளபகுதியிலும் பெரும் பதற்றம் நிலவியது.

தாக்குதல் நடத்தப்பட்ட இவ் வேளையில் நோயாளர்களும், ஊழியர்களும் பதுங்குகுழிக்குள் அடைக்கலம் தேடிக் கொண்டனர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## திருநெல்வேலி சந்தையும் நேற்றைய தாக்குதலில் சேதம்

நேற்று நண்பகல் திருநெல்வேலிச் சந்தை மீது மேற்கொள்ளப்பட்ட 'அவ்ரோ' குண்டு வீச்சுத் தாக்குதலில் நால்வர் படுகாயமடைந்தனர். அத்துடன் சந்தைக் கடைகள் பலத்த சேதமடைந்தன.

இத்தாக்குதலில் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். காயமடைந்தோர்உடன் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

(3-70 ஸ்ரீ)

## நல்லூரில் விளைந்த விபரீதம்

நேற்று மாலை 5 மணியளவில் நல்லூர்ப் பகுதியில் இடம் பெற்ற விமானக் குண்டுவீச்சினால் நல்லூர் மாநகரசபைக் கட்டடம் இடிந்து விழுந்தது. அத்துடன் அங்குள்ள தென்னை மரங்களும் முறிந்தும் முறியாததுமாகக் காணப்படுகின்றன.

இப்பகுதியில் வீசப்பட்ட இன்னொரு குண்டுநல்லூர்க் கந்தன் ஆலயத்தின் முன் உள்ளவீட்டின் அருகேவிழுந்து ... 4 ஆம் பக்கம் பார்க்க

## சரமாரியான ஹெலி வேட்டு

(காங்கேசன்துறை)

நேற்று மாலை கோண்டாவில்மேற்குப் பகுதியைச் சுற்றி வந்த 'ஹெலி' ஒன்று திடீரென சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டு இணுவில் மருதனாமடம் — 4 ஆம் பக்கம் பார்க்க

## பட்டினிச்சாவின் பாதையில் இவர்களும்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுண்டிக்குளம் போக்கறுப்பு கடற்கரை ஆகிய கிராமங்களில் கடற்றொழிலில் ஈடுபட்டிருக்கும் பல ஆயிரக்கணக்கான கடற்தொழிலாளர்கள் உணவுப் பொருட்கள் எதுவுமில்லாமையால் பட்டினியை எதிர்நோக்குகின்றனர்

பங்குனி மாதம் தொடக்கம் ஐப்பசி மாதம் வரை உடப்பு, மட்டக்களப்பு, மலைநாடு ஆகிய பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள் இப்பகுதியில் கரைவலைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கடந்த ஒன்றரை —4 ஆம் பக்கம் பார்க்க

★ விமானக் கொடூர விளைவு

## குடலும், மண்டையோடும் எஞ்சியவை அவையே

நேற்று நிகழ்ந்த ராட்சதவிமானத்தாக்குதலில் அத்தியடிப் பகுதியும் பெரிதும் பாதிக்கப்பட்டது அங்குள்ள கட்டிடம் ஒன்றில் ஓடு மாற்றும் வேலைக்குச் சென்றிருந்த இளைஞர் ஒருவர் குண்டு வீச்சினால் சின்னாபின்னமானார். அவரது இருகால்களும், கரங்களும் துண்டாகின அவரது தலையும், நெஞ்சுப்பாகமும், குடலுமே எஞ்சின, உறவினர் இவற்றை உரப்பையில் போட்டு எடுத்துச் சென்றனர். (ஸ்ரீ)

## நாவாந்துறை விமானத் தாக்கு இருபது குடிசைகள் நாசம்

நேற்று மாலை கொட்டடி, நாவாந்துறை பகுதிகளிலும் அவ்ரோ விமானமும் வை-12 ரக விமானமும் குண்டு வீச்சை நிகழ்த்தின கொட்டடிப் பகுதியில் நடைபெற்ற குண்டு வீச்சின் போது அநேகமான குண்டுகள் கண்ணபுரம் சுடற்கரையோரமாக வீழ்ந்து வெடித்தன.

இதேவேளை நாவாந்துறையில் அவ்ரோ விமானம் நடாத்திய தாக்குதலில் மூன்று வீடுகள் சேதமடைந்தன. மண்பிட்டிப்பகுதியில் ராட்சத வை- 12 ரக விமானம் நடாத்திய குண்டு வீச்சில் — 04 ஆம் பக்கம் பார்க்க

## 40 பொதுமக்கள் ஆயுதக்குழுவினால் கொலை

கிழக்கு அம்பாறையில் திருக்கண்ணி எனும் இடத்தில் நாற்பது பொதுமக்கள் ஆயுதம் தாங்கிய முஸ்லிம் குழுவொன்றினால் கொல்லப் — 04 ஆம் பக்கம் பார்க்க

## திருமலையில் ஊரடங்கு

திருகோணமலையில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இப் பகுதிகளுக்கு கூடுதலாக — 04 ஆம் பக்கம் பார்க்க

## மானிப்பாய் மருத்துவமனை மீது தாக்கு; நோயாளிகள் பேரின்னல்

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலை மீது நேற்று நண்பகல் 11,45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத்தாக்குதலில் மூவர் ஸ்தலத்திலேயே பலியாகினர் ஆறு பேர்வரை படுகாயமடைந்தனர்.

மூன்று பொம்மர்கள் மேற்கொண்ட இத்தாக்குதலில் அவ் வைத்தியசாலையின் கட்டடங்கள் யாவும் பெருமளவு பாதிப்படைந்ததோடு பல கடைகளும் சேதத்திற்குள்ளாகின.

நூற்றுக்கணக்கான நோயாளிகள் தங்கியிருந்த இவ் வைத்தியசாலை மீது மேற்கொள்ளப்பட்ட இக் கொடூரத் தாக்குதலில் நோயாளிகள் தமது நோய்களை மறந்து உயிரைக் காப்பாற்ற சிதறி ஓடினார்கள்.

முற்றாக இயலாத நோயாளிகள் உயிரைக்கையில் பிடித் — 4ஆம் பக்கம் பார்க்க

## குண்டு வீச்சுடன் துண்டுப் பிரசுர வீச்சும்....

நேற்று மாலை அவ்ரோ விமானத்தில் இருந்து லேக்ஹவுஸ் நிறுவனத்தினரால் வெளியிடப்படும் தினகரன் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளின் பிரதிகள் வீசப்பட்டன.

இவை அரியாலை இருபாலை நாயன்மார்கட்டுப் பகுதியில் வீழ்ந்தன. இப்பத்திரிகை கடந்த மூன்றாம் திகதி ஜூன் இருபத்தொன்பதாம் திகதி வெளியிடப்பட்டவையாகும். விடுதலைப் புலிகளைக் கண்டித்து வின்ஸ் —4ஆம் பக்கம் பார்க்க

# தேர்தல் நடந்தால் மீண்டும் ஆட்சிக்கு வருவேன்;
# எனது பதவி நீக்கம் ஒரு 'திடீர் புரட்சி' -பெனாஸிர்

தன்னைப் பதவி நீக்கம் செய்தது பாகிஸ்தான் அதிபர் குலாம் இஷாக் செய்த ஒரு திடீர் புரட்சி என முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானில் ஒரு சுயேட்சையான தேர்தல் நடாத்தப்படுமென்பதில் எவருக்கும் நம்பிக்கையில்லை. பாகிஸ்தானின் எதிர்காலம் இனி இருண்டதாகவே இருக்கும். சுயேச்சையான தேர்தல் நடந்தால் பாகிஸ்தான் மக்கள் கட்சி மீண்டும் கூடிய பலத்துடன் ஆட்சிக்கு வரும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பாகிஸ்தானில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அக்டோபர் 24-ம் திகதி அங்கு சுயேச்சையான பொதுத்தேர்தல் நடாத்தப்படுமென ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

பெனாஸிரின் பதவி நீக்கம் அரசியல் அமைப்புக்கு ஏற்ப ஜனநாயக அடிப்படையில் எடுக்கப்பட்ட ஒரு முடிவு. அவரது ஆட்சியில் பல நிர்வாகச்சீர்கேடுகள் இடம் பெற்றுள்ளன, உறவினர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன, லஞ்சக் குற்றச்சாட்டுகளும் பல உள்ளன.

ஜனநாயக அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுக்கு ஜனநாயகமுறைகளுக்கு முரணான எதிர்ப்புக் காட்டப்படுமேயானால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாக்.ஜனாதிபதி குலாம் இஷாக் தெரிவித்துள்ளார்.

இதேவேளைபாகிஸ்தானின் காபந்து பிரதமராக நியமிக்கப்பட்ட58வயதானஜூடோ நேற்று சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்.அத்துடன் அங்கு நான்கு மாகாண அசெம்பிளிகளும் கலைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பெனாஸிர் பூட்டோ இஸ்லாமாபாத்தில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக நேற்றுப் பிற்பகல் கிடைத்த செய்தியொன்று



தெரிவிக்கின்றது. எனினும் இச்செய்தி ஊர்ஜிதப்படுத்தப் படவில்லை. (கி)

## படகு அகதிகளை ஹெலி சுட்டது

திருமலையில் இருந்து வடமராட்சிக்கு அகதிகளை ஏற்றி வந்த படகின் மீது ஹெலியில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இச் சம்பவம் ஞாயிறு காலை நடைபெற்றது, திருமலையில் இருந்து வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு படகு ஒன்றின்மீது அகதிகளை ஏற்றிக்கொண்டு வந்த போது கடற்கரை ஓரமாக வந்த ஹெலி கட்டைக்காட்டுப் பகுதியில் வைத்து திடீரென துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது.

தெய்வாதீனமாக படகில் வந்தவர்கள் தப்பிக்கொண்டனர். (43 கி)

## திருடர் அட்டகாசம்

அண்மைக் காலத்தில் சுண்டுக்குளி வட்டாரத்தில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் ஈச்சமோட்டையில் செபஸ்தியாம்பிள்ளை அண்ணாவியார் வீட்டின் பின்புறத்தில் கட்டியிருந்த இரண்டாயிரம் ரூபா பெறுமதியான ஆடு ஒன்று களவாடப்பட்டுள்ளது.

அதே தினம் சலமன் லேனிலும், பாண்டியன் தாழ்வு மு. பூபாலசிங்கம் வீட்டிலும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்ட முயன்ற சமயம் வீட்டுசொந்தக் காரர்களும், அயலவர்களும் விழித்துக் கொண்டதினால் கள்வர்கள் விரட்டியடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (16 கி)

## கழகம் உதயம்

பச்சிலைப்பள்ளி இடம் பெயர்ந்தோர் புனர் வாழ்வுக் கழகம் அண்மையில் பளை மகாவித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இக்கழகத்தின் தலைவராக சு. கந்தசாமி (பளை உதவி அரசாங்க அதிபர்), செயலாளராக ஏ. பீ. ஜோர்ஜ்(பளை ப. நோ. கூ. சங்கத்தலைவர்), பொருளாளராக க. பத்மநாதன் (கிராம சேவை அலுவலர் பளை) ஆகியோரும் ஒன்பது நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ப. 3கி)

29வருட போராட்டத்தின் பின்

## ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆயுதப்போராட்டத்தை கைவிட்டது

தென்னாபிரிக்க வெள்ளையர் அரசுக் கெதிரான ஆயுதப்போராட்டத்தை உடனடியாகக் கைவிட்டுள்ளதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நேற்று அறிவித்துள்ளது.

கடந்த 29 வருடங்களாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தென்னாபிரிக்க வெள்ளையர் அரசுக் கெதிராக ஆயுதப் போராட்டத்தை நடாத்தி வந்தது.

தென்னாபிரிக்க சிறுபான்மை வெள்ளையர் அரசுக்கும்- ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்குமிடையே நடந்த 15 மணிநேரப் பேச்சுக்குப் பிறகு வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலேயே யுத்த நிறுத்தம் பற்றி அறிவிக்கப்பட்டது.

பேச்சு மூலம் சமாதான அரசியல் தீர்வை வெகு விரைவில் எட்டலாம் என்ற நம்பிக்கையிலேயே ஆயுதப்போராட்டம் நிறுத்தப்பட்டதாக இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## யூ. எஸ். எஸ். இன்டிபென்டன் வளைகுடாவை நெருங்குகிறது

'யூ. எஸ். எஸ் இன்டிபென்டன்' என்ற அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல் அதன் போர் விமானங்களை நடவடிக்கையில் ஈடுபடுத்துமளவுக்கு வளைகுடாவை அண்மித்து விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க ஈராக்கிற்கும் அதன் ஆக்கிரமிப்பில் இருக்கும் குவைத்துக்கும் எதிராக வர்த்தக, நிதி, இராணுவ தடைவிதிப்பதற்கான தீர்மானம் ஐ. நா. பாதுகாப்புச்சபையில் அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. 15 அங்கத்துவ நாடுகளில் கியூபா, ஜேர்மன் ஆகியவை வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. ஏனைய 13 நாடுகளும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. (கி)

## ஈரோஸ் உறுப்பினர் ராஜினாமா நேற்றுச் சபையில் அறிவிப்பு

ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்துப் பேர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளதாக நேற்றுப் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

எட்வேர்ட் செபஸ்தியாம்பிள்ளை, ஏ. குணசீலன், கே. ராஜபுவனேஸ்வரன்,எம்.இராமலிங்கம், கே.செல்வநாயகம், கே. தில்லைநாதன், வி. கைலாசபிள்ளை, எஸ்.செல்வராஜா,கே.பஸீர் அபீர்,பஸீர் சேகூர் தாகூத் ஆகியோரே இராஜினாமாச் செய்தஉறுப்பினர்கள் என சபாநாயகர் எம். எச். மொகமட் பாராளுமன்றக் கூட்ட ஆரம்பத்தில் அறிவித்தார். (கி)

## ஓய்வூதிய வவுச்சர்கள் வந்தன; வங்கிகளில் நேரடியாகப் பெறலாம்

யூலை மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் யாழ். செயலகத்திற்குக் கப்பல் மூலமாகக் கிடைக்கப்பெற்றுள்ளன.

யாழ் மாநகர சபைப் பிரதேசம் உள்ளிட்ட சில கஷ்டப்பிரதேசங்களுக்குரிய பென்சன் வவுச்சர்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்தவர்கள் தத்தமது அஞ்சல் அலுவலகங்களுக்குச் சென்று பென்சன் வவுச்சர்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய இடங்களுக்குரிய பென்சன் வவுச்சர்கள் அந்தந்த வங்கிகளில் வைத்து நேரடியாக ஓய்வூதியகாரர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஓய்வூதியப் பிரிவு பிரதம லிகிதர் எஸ். கந்தசாமி தெரிவித்தார்.

கஷ்டப்பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு நேரடியாக அந்தந்த வங்கிகளிலே வைத்து வவுச்சர்களை வழங்குவதில் சிரமங்கள் இருப்பதினாலேயே அவை தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது பற்றிய மேலும் விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென ஓய்வூதியப் பிரிவுக் கணக்காளர் எஸ். சிவபாலன்தெரிவித்தார்,(66கி)

## உணவுப் பங்கீட்டு முறையை மாற்றி அமைக்கக் கோரிக்கை

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக விநியோகிக்கப்பட்ட அரிசி சரியான முறையில் பங்கிடப்படவில்லை எனப் பல பொது மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

பத்து அங்கத்தவர் உள்ள குடும்பமொன்றிற்கும் மூன்று கிலோ அரிசி; ஒரு அங்கத்தவர் உள்ள குடும்பம் ஒன்றிற்கும் மூன்று கிலோ அரிசியே வழங்கப்பட்டது, இப்பங்கீட்டு முறையின் காரணமாக அங்கத்தவர் தொகை கூடிய குடும்பங்கள் மிகவும் பாதிப்பு அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக் குறைபாட்டினை நிவர்த்திசெய்வதற்குக் குடும்ப அங்கத்தவர் தொகைக்கு ஏற்ற விகிதாசாரத்தில் அரிசி, சீனி, மா போன்ற உணவுப் பொருட்கள் பங்கிடு செய்யப்படவேண்டும் என்று பொது மக்கள் அரசாங்க அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (43கி)

கல்விப்பணிப்பாளர் சாடுகிறார்:

## ஆசிரியர் சம்பளம் வழங்காமைக்கு திணைக்கள ஊழியரே காரணம்

இம்மாதம் ஒன்பதாம் திகதி இரண்டாம் தவணை விடுமுறை ஆரம்பிப்பதால் இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் தமது ஒப்பத்தை யாழ் கல்வித் திணைக்களத்தில் இடுமாறு வடமகாண கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு அதிககாலதாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

இக்கால தாமதத்திற்கு முக்கிய காரணம் கல்வித்திணைக்களத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பொறுப்பற்ற தன்மையே என வடமாகாண கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

சம்பள முற்பணம் வழங்கும் பிரிவைவிட மற்றைய பிரிவுகளின் வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. எனவே திணைக்களத்தில் பணிபுரியும் சகலஊழியர்களையும்உடனடியாக கல்வித் திணைக்களத்திற்கு வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார். கடமைக்குத் திரும்பாத ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் திணைக்கள ஊழியர்களின் வருகையைப் பொறுத்து மாவட்டம் மாவட்டமாகப் பிரித்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சொன்னார். (70 கி)

## யாழ். செஞ்சிலுவைச் சங்கம்மீது 'தாக்குதல் உடன் பூரண விசாரணைக்குக் கோரிக்கை

யாழ். செஞ்சிலுவைச் சங்க கட்டிடத்தின் மீது நேற்று முன்தினம் இரவு குண்டு வீச்சு நிகழ்த்தியது பற்றி உடனடியாக விசாரணை செய்யப்படல் வேண்டுமென யாழ். செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

சண்டைகள் எதுவும் இடம் பெறாத வேளை, பொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக நடைபெற்று வரும் இத் தாக்குதல்கள் நிறுத்தப்படல் வேண்டுமெனவும் யாழ். செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுள்ளது.

இந்தக் குண்டுவீச்சுத்தாக்குதலினால் செஞ்சிலுவைச் சங்கக் கட்டிடத்தின் பின் பகுதி சேதமடைந்தது. இப்பகுதியில் அத்தியாவசிய மருந்துவகைகள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதே சமயம் நேற்று முன்தினம் இரவு யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையை நோக்கியும் பொம்மரிலிருந்து றொக்கட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (66 கி)

## டெங்குபரவுகிறது

நாட்டில் பரவலாக டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாக அறிவிக்கப்படுகின்றது,

தற்பொழுது நாட்டில் 200 பேர் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த டெங்கினால் பாதிக்கப்பட்ட 51பேர் மரணமடைந்துள்ளனர், இவர்களுள் அநேகமானோர் 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களாவர். (கி)

## கொடுப்பனவு

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்களுக்குமட்டுப்படுத்தப்பட்டதொகையே வழங்கப்படுகின்றது.

இரண்டாயிரம் ரூபாய் மட்டுமே ஒருவருக்கு இங்கு பணக் கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருகிறது. (50கி)

## ஓடுபிரித்தவர் அகப்பட்டார்; மற்றையவர் ஓடித் தப்பினார்

கைதடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தச்சந்தோப்புக் கிளையில் திருடுவதற்காக ஓடுபிரித்து உள்ளே இறங்கியவர் மன்னாரிலிருந்து வந்துகொண்டிருந்த புலிகளினால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு தென்மராட்சி அரசியல் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவரை உள்ளே இறக்கிவிட்டு வெளியே நின்றவர்கள் ஓடிமறைந்து விட்டார்கள். இவர்களுக்கும் கடந்த காலங்களில் இப் பகுதியில் நடந்த பல திருட்டுக்களுக்கும் தொடர்பிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (ப- 5கி)

### கொழும்பில் சிக்கியுள்ளோரை ஏற்றிக்கொண்டு

# வடக்கிற்கு அகதிக் கப்பல்

கொழும்பில் தற்பொழுது தொடர்ந்தும் தங்கியுள்ள வடபகுதியைசேர்ந்தோரைகப்பல் மூலம் இங்கு கொண்டுவருவதற்கு புதிய ஏற்பாடொன்று செய்யப்பட்டு வருகின்றது.

கொழும்பிற்கு அலுவல்களின் பொருட்டு சென்று அங்கு சிக்கியோரில் ஒரு பகுதியினர் ஏற்கனவே பஸ்களிலும், லொறிகளிலும் இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் மேலும் பல வடபகுதியினர் தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாது கொழும்பில் அகதிமுகாம்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தற்பொழுது தங்கியுள்ளனர்.

இவர்கள் கைவசமிருந்த பணம் செலவழிந்து விட்ட நிலையில் தங்கியிருப்பதால் அவர்களை இலவசமாகவே சொந்தஇடங்களுக்கு அனுப்ப நடவடிக்கையெடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இதனையடுத்து அகில இலங்கை இந்துமன்றம் எடுத்தமுயற்சியினால் வடபகுதிக்கு அகதிக்கப்பல் ஒன்றை விடுவதற்கு அரசு நடவடிக்கையெடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இக்கப்பலில் வடபகுதிக்கு வரவிரும்புவோர் பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் உள்ள இந்து மாமன்ற அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## பட்டினிக் கொடுமையால் அறுவர் தற்கொலை முயற்சி

பட்டினிக் கொடுமையால் குடும்பமொன்றுஅலரிக்காயை உண்டு உயிரை மாய்க்க முயன்ற சம்பவம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி செல்வநகரைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேரே பட்டினி தாங்க முடியாத நிலையில் தற்கொலை செய்ய முயன்றவர்களாவர்.

அவ்வூர்சிற்றூர்அவை உறுப்பினர்களால் மீட்கப்பட்ட இவர்கள் தற்பொழுது அங்குள்ள ஆலயமொன்றில் தங்கியுள்ளனர். (ப-6-கி)

## முதலுதவி மையம் இன்று ஆரம்பம்

நல்லூர் ஸ்தான சீ. சீ. த.க. பாடசாலையில் இன்று காலை 10 மணிக்கு ''முதலுதவி மையம்'' ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (70 கி)

## கொழும்பு இந்து ஆலயங்களுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பில் உள்ள இந்து ஆலயங்களுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையையும், கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பதட்டத்தையும் பயன்படுத்தி கொழும்பிலுள்ள இந்து ஆலயங்கள் தாக்கப்படலாம் என்ற அச்சம் அங்கு காணப்படுகின்றது.

இதனையடுத்தே ஆயுதம் தாங்கிய பொலிஸாரின் பாதுகாப்பு இந்து ஆலயங்களுக்கு வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

### பயணிகள் தொடர்பகம் அறிவிப்பு:

## விண்ணப்பம் சமர்ப்பித்த மறுநாள் பாஸ் கிடைக்கும்; பெறப்பட்ட 5 தினங்களுக்குள் பயணம் செய்யவேண்டும்

பயணிகள் போக்குவரத்து தொடர்பகத்தின் புதிய பிரிவு பருத்தித்துறையில் நேற்று இயங்க ஆரம்பித்துள்ளது.

அதேவேளை சாவகச்சேரியிலும் பருத்தித்துறையிலும் இயங்கிவரும் பிரிவுகளில் காலை ஏழு மணிமுதல் பிற்பகல் ஐந்துமணிவரை பாஸ் வழங்கப்படும். சாவகச்சேரிப் பிரிவிலும், பருத்தித்துறைப் பிரிவிலும் கொழும்பு செல்வோருக்கான அனுமதியும், வாகனப்பதிவும் வழங்கப்படமாட்டாது. அவ்வனுமதிகள் முத்திரைச்சந்தியில் இயங்கும் தலைமைச் செயலகத்திலேயே வழங்கப்படும்.

பூநகரிக்குப் போவதற்கான பாஸ் அரச அதிபரின் அனுமதியுடன் விண்ணப்பிப்பவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும்.

அரச ஊழியரின் பாஸ் அவரவர் தேவை கருதி அந்தந்த மாவட்ட அரச அதிபரின் ஆலோசனையின் பேரில் வழங்கப்படும்.

அனுமதி எடுத்து குடாநாட்டைவிட்டு வெளியேறும் வாகனங்கள் பாஸ் எடுத்த பயணிகளின் பெயர்ப்பட்டியலைப் பதிவு செய்து, அந்தப் பெயர்ப்பட்டியலில் உள்ளவர்களை மட்டும் ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்படுமென பயணிகள் தொடர்பகப் பொறுப்பாளர் சலீம் தெரிவித்தார்.

பாஸ் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து நாட்களுக்குள் பயணம் செய்ய வேண்டும். அதன்பின் அந்தப் பாஸ் செல்லுபடியற்றதாகிவிடும்.

அனுமதிப்பத்திரம் பதியப்பட்டு அடுத்தநாள் காலை ஒன்பதுமணிமுதல் பதினொரு மணிவரையும், பிற்பகல் மூன்றுமணிமுதல் ஐந்துமணிவரையும் அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

குடாநாட்டிற்கு வெளியே செல்வதற்கான அனுமதி வழங்கும் கருமபீடங்கள் நான்காக அமைக்கப்பட்டுள்ளன. முதலாவது அலுவலகத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களுக்கும். இரண்டாவது, வியாபாரிகளுக்கும், வாகன பதிவுகளுக்கும் மூன்றாவது, கொழும்பு செல்வோருக்கும் நான்காவது, அத்தியாவசியத் தொடர்புகளுக்கும் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. (70-கி)

## அகதிப்படகு கடலில் சிக்கியது கைதானோர் பலாலியில்

வடபகுதியிலிருந்து இந்தியாவை நோக்கிச் சென்ற ஐந்து அகதிகள் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

படகிற் பயணம் செய்தோர் கைது செய்யப்பட்டு பலாலி இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களில் இருபத்தியேழு இளைஞர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன. (கி)

### ஆசிய வங்கி வழங்கிய

## 4 கோடி அமெரிக்க டாலரில் வட. கிழக்கிற்கு ஒருசதமுமில்லை

ஆசிய அபிவிருத்தி வங்கி புதிதாக வீதித் திருத்தத்திற்கென வழங்கிய முழுப் பணமும் தென்பகுதிகளுககே பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் நானூறு கிலோமீற்றர் நீளமான வீதிகளைத் திருத்துவதற்கென நான்கு கோடி அமெரிக்க டாலர்களை வழங்கியிருந்தது.

இப்பணத்தில் ஒருசதமேனும் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள வீதிகளைத் திருத்துவதற்குப் பயன் படுத்தவில்லை.

இப்பணம் பேலியாகொட புத்தளம் வீதி, புத்தளம்-அனுராதபுரம் வீதி, கட்டுகஸ்தோட்ட - குருநாகல்வீதி, கட்டுகஸ்தோட்ட-மாத்தளை வீதி ஆகியவற்றைத் திருத்தவே இப்பணம் முழுமையாக ஒதுக்கப்பட்டுள்ளது. (கி)

## இரு இராணுவம் பலி

யாழ். கோட்டை முகாம் மற்றும் பலாலி இராணுவ முகாம் ஆகியவற்றின் மீது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியானதாக ஏஜன்ஸி செய்திகள் கொழும்பை ஆதாரம் காட்டி தெரிவித்தன.

மாங்குளம் மோதலில் ஒரு இராணுவ வீரர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## காரைநகரில் கடும் தாக்குதல்

காரைநகரில் நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணி முதல் கடுமையான கடற்பீரங்கி, மற்றும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் நள்ளிரவு வேளை ஹெலிகொப்டரொன்றும் இப்பகுதியில் தாழப்பறந்து தாக்குதலை மேற்கொண்டது.

அதிகாலைவரை இத்தாக்குதல்கள் தொடர்ந்தன. கடந்தசில தினங்களாக காரைநகர்ப் பகுதியில் இரவுநேரத் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன. (கி)

## காரைநகர் மக்கள் அகதிகளாக வெளியேறுகிறார்கள்

காரைநகர் பகுதியைச் சேர்ந்தோர் கடந்த ஞாயிற்றுக் கிழமையிலிருந்து அகதிகளாகப் பல்வேறு இடங்களுக்கும் இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளிலேயே அதிகளவில் அகதிகள் தற்சமயம் தங்கியுள்ளனர். இதைவிடப்பல சனசமூக நிலையங்களிலும் பல அகதிகள் குடி கொண்டுள்ளனர். (ப- 1 கி)

## பளை ஆசிரியர் சம்பளம் இன்று

பளைக்கொத்தணியிலுள்ள ஆசிரியர்களுக்கான யூலை மாதச் சம்பள முற்பணமான ஆயிரம்ரூபா இன்று 8-ந் திகதி புதன்கிழமை காலை பளைக் கொத்தணி அலுவலகத்தில் வைத்து காசோலையாக வழங்கப்படவுள்ளது.

சகல ஆசிரியர்களையும் அதனை இன்று பெற்றுக் கொள்ளுமாறு பளைக்கொத்தணி அதிபர் அ. பொ. செல்லையா தெரிவித்துள்ளார். (ப-5கி)

## யாழ். நகரில் விமான சாகஸம்

நேற்று முன்தினம் பகல் இரண்டு மணியளவில் யாழ். நகருக்கு மேலால் பறந்த குண்டு வீச்சு விமானம் ஒன்று குத்துக்கரணம் அடித்தும் பக்கவாட்டில் புரண்டும் பல சாகஸ விளையாட்டுக்களை ஒரு சில நிமிடங்கள் செய்து காட்டியது.

சுதந்திரதின அணிவகுப்பில் இடம்பெறும் விமான சாகஸ காட்சிகளை ஒத்திருந்த இந்தக் காட்சியை நகரில் உள்ள அநேகமானோர் கண்டு களித்தனர். பின்னர் இந்த பொம்மர் பலாலியை நோக்கிப் பறந்து சென்றது. (16 கி)

## தொடரும் ஹெலி தாக்குதல் ஒருவர் பலி; பலர் படுகாயம்

தென்மராட்சிப் பகுதியில் நேற்று நண்பகல் முதல் மாலை வரை ஹெலிகொப்டர் ஒன்று மூர்க்கமாகத் தாக்கியதில் ஒருவர் பலியானார், மற்றும் பலர் படுகாயமுற்றனர்.

நேற்று நண்பகல் முதல் மீசாலை, கொடிகாமம், சரசாலை ஆகிய இடங்களில் இத்தாக்குதல்கள் பரவலாக மேற்கொள்ளப்பட்டன.

சரசாலை- வண்ணாத்திப் பாலத்தில் பாதசாரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார், மற்றும் பலர் படுகாயமுற்றனர். (கி)

## அம்பாறையில் மேலும் 33 சடலங்கள் 50 பேரை காணவில்லை எனத்தகவல்

அம்பாறையில் நேற்று முன்தினம் நண்பகல் வரை 33 முஸ்லிம்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

பாலமுனைக்கும் - கல்முனைக்கும் இடையே மூன்று வெவ்வேறு இடங்களில் இந்த சடலங்கள் காணப்பட்டன.

வயலில் அறுவடை வேலை செய்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த முஸ்லிம்களின் சடலங்களே இவை எனக்கருதப்படுகின்றது.

இந்தச் சடலங்களில் சூட்டுக் காயங்களும், வெட்டுக்காயங்களும் காணப்பட்டன.

இதுதவிர இச்சடலங்களை மீட்கச்சென்ற மேலும் ஐம்பது முஸ்லிம்கள் இதுவரை தமது இருப்பிடங்களுக்குத் திரும்பவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## சுயதொழில் பயிற்சி

தென்மராட்சியில் உள்ள இடம் பெயர்ந்தோர்களுக்கான பயிற்சி முகாம்களில் உள்ளவர்களுக்கு சுயதொழில் பயிற்சி வழங்குவதற்கு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன் ஆரம்பக் கட்டமாக இம்மன்றம் தனது முதலாவது பயிற்சியை மட்டுவில் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்க இருக்கிறது.

இதற்காகப் பொதுமக்கள் அனைவரும் தங்களால் ஆன பனம்பழம், வேப்பம் விதைகளை மேற்படி முகாமில் தந்துதவுமாறு யாழ் மாவட்ட இந்து மாமன்றத் தலைவர் தனபாலன் கேட்டுள்ளார். (ப-5கி)

## தேங்காய் எண்ணையை நீங்களும் தயாரிக்கலாம்

தேங்காய் எண்ணைக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையடுத்து குடும்பப் பெண்கள் தாமே சுயமாக தமதுதேவைகளுக்கு தேங்காய் எண்ணையைத் தயாரித்து வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இக்குடும்பப்பெண்கள் தேங்காயைத்துருவி பாலைப் பிழிந்தெடுத்து அதனை தாச்சியிலிட்டு அடுப்பில் வைத்து எரித்துக் காய்ச்சி தேங்காய் எண்ணையைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

இவ்வாறு பெறப்படும் தேங்காய் எண்ணை சுத்தமாகவும் தரமாகவும், அதே நேரத்தில் வெளிச்சந்தை ஒப்பீட்டுக்கு மலிவாக இருப்பதாகவும் குடும்பப்பெண்கள் சிலர் தெரிவித்தனர். (50கி)

## கால்நடைகளைக் கட்டி வளர்க்க விடுதலைப்புலிகள் கோரிக்கை

கால்நடைகளை கட்டாக்காலியாக அலையவிட்டு விவசாயப் பயிர்களை நாசமாக்க இடமளிக்க வேண்டாமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் கால்நடை வளர்ப்போரைக் கோரியுள்ளது.

அத்துடன் கால்நடைகளை எப்பொழுதும் கட்டிவைத்துப் பராமரிக்குமாறும் கால்நடை வளர்ப்போருக்கு விடுத்த கோரிக்கையில் விடுதலைப் புலிகள்கேட்டுள்ளனர். (50கி)

### கிழக்கில் முஸ்லிம்கள் கொலையின் எதிரொலி

# கொழும்பில் பதற்றநிலை இந்து ஆலயம் தாக்க முயற்சி

கிழக்கில் முஸ்லிம்கள் பலர் கொல்லப்பட்டதன்எதிரொலி கொழும்பில் பதற்றமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

கடந்த ஞாயிறு இரவு கொழும்பில் உள்ள இந்து ஆலயம் ஒன்றை தாக்க முஸ்லிம் இளைஞர் குழு ஒன்று முயற்சி செய்ததாகவும், இக்குழுவில் இருவர் பின்னர் ஆலயப்பகுதியில் இன்னோர் குழுவொன்றின் கத்திக்குத்துக்கு படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சகல இந்து ஆலய சூழல்களிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் காவல் கடமையில் நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. (து)

### வடமராட்சி கிழக்கில்

## கடற்படைப் படகுகள் அதிதீவிர ரோந்து

வடமராட்சி கிழக்கு கடற்பிராந்தியத்தில் கடந்த இரண்டு மூன்று நாட்களாக கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடற்படையினரின் பாரிய கப்பல்கள் நடுக்கடலில் நங்கூரம் இட்டு நிற்க ஐந்துக்கு மேற்பட்ட அதிவேக விசைப் படகுகள் அங்குமிங்கும்செல்வதும் திரும்பி வருவதுமாக உள்ளன. சில படகுகள் கரையிலிருந்து ஐந்நூறு மீற்றர் தூரம்வரை வந்து கரையிலுள்ள நிலைமைகளை அவதானித்தும் செல்கின்றன.

இதன் காரணமாக இப்பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள் இரவு பகல் வேளைகளில் மீன்பிடிக்க செல்வதைநிரந்தரமாகவே நிறுத்தியுள்ளனர். இதனால் மீனுக்கும் பெரும் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. (8-ஸ்ரீ)

## அவர்கள் சொல்வது

கோட்டையைத்தாக்குவதற்குகடந்த ஞாயிறன்று விடுதலைப்புலிகளால் பயன் படுத்தப்பட்ட புல்டோசர் வாகனத்தை ராணுவம் கைப்பற்றியுள்ளதாகவும் அவ்வாகனத்தில் இருந்த டீசலை பயன்படுத்தி கோட்டைக்கான ஜெனரேட்டரை தாம் இயக்க ஆரம்பித்துள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன,

கோட்டையினுள் கொல்லப்பட்ட போராளிகளிடம் இருந்து ஆயுதங்களையும் மீட்டெடுத்துள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன, (ஸ்ரீ)

# 480 அகதிக் குடும்பங்களை இராணுவத்தினர் ஏற்றிச்சென்றனர்

திருகோணமலை ஆலங்கேணி விநாயக மகாவித்தியாலய அகதிமுகாமில் தங்கி இருந்த 480 குடும்ப அகதிகள் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டதாக விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

இவ் அகதிகளை இடமாற்றுவதெனக் கூறியே இராணுவத்தினர் வாகனங்களில் ஏற்றிச் சென்றதாகவும் இவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறியமுடியவில்லை என்றும் அச்செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது. (03-ஸ்ரீ)

### திருமலையில் ..

இராணுவமும் பொலிஸாரும் அனுப்பப்பட்டதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை பெருமளவிலான முஸ்லிம்கள் இடம் பெயர்ந்து அக்கரைப்பற்றுப் பகுதிக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ)

### குருரக் குண்டு…

மூவரது சடலங்கள் அடையாளம் காணப்படமுடியாதவாறு சிதைவுற்றிருந்தன.

ஆரியகுளம் பலாலிவீதியருகில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு குண்டு வீச்சுத்தாக்குதலில் ஒருவர் பலியாகி பலர் படுகாயமடைந்தனர். இப்பகுதியில் வீசப்பட்ட ஆறு குண்டுகளினால் பல கடைகள் உட்பட இருபதுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

இவ்வீதியால் வந்துகொண்டிருந்த எஸ். வரதராஜா (அரியாலை) என்ற ஸ்ரான்லி வீதி, இலங்கைவங்கிக் கிளையின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவரே தாக்குதலில் பலியாகியவராகும். மேலும் குணசிங்கம், சசிகா, கபிலராஜா ஆகியோர் காயமடைந்தனர். அத்துடன் கோம்பையன் மணல் பகுதியிலும் யாழ். பஸ்நிலையப் பகுதிகளிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இத்தாக்குதல்களையடுத்து இப்பகுதிகளில் வசித்துவந்த பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்தனர். தொடர்ந்தும் தம்மீது தாக்குதல் நடாத்தப்படலாம் என்ற அச்சத்தினால் இவர்கள் தூரஇடங்களுக்கு இடம் பெயர்ந்தனர். (03-68-16-ஸ்ரீ)

### மானிப்பாய்...

தபடி அங்கே தங்கியிருந்தனர் இத்தாக்குதலில் வைத்தியசாலைக்கு சொந்தமான அம்புலன்ஸ் ஒன்றும் முற்றாக சேதமடைந்தது. அத்துடன் 10 க்கும் மேற்பட்ட சைக்கிள்களும் சேதமடைந்தன.

டீ. ஜி. சைமன் (75), கடலைவிற்கும் பெண் ஒருவர் உட்பட நீல நிறடெனிம் காற்சட்டை அணிந்த இளைஞர் ஒருவ நமே மேற்படி தாக்தலில் பலியாகியவர்களாகும். இவர்கள் வைத்தியசாலைக்கு முன் நின்றவர்களாகும்.

ஆறு குண்டுகள் வீசப்பட்ட இத் தாக்குதலில் வைத்தியசாலையைச் சுற்றியுள்ள கோவில்கள், பல கடைகள் பலத்த சேதமடைந்தன. வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்கள் இருவரும் காயமடைந்தனர்.

இத்தாக்குதலையடுத்து இவ் வைத்தியசாலையில் தங்கியிருந்த நோயாளிகள் பீதிகாரணமாக வெளியேறிவிட்டனர். இதைப் பயன்படுத்தி ஒரு சிலர் களவு வேலைகளிலும் ஈடுபட்டனர்.

இயலாத ஒருசில நோயாளிகள் மட்டுமே செய்வதறியாது அவ் வைத்தியசாலையில் தற்போது தங்கியுள்ளனர். அவசர சிகிச்சை பெறும் நோயாளிகள் தெல்லிப்பழை, சங்கானை பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்கு இடம் பெயர்ந்தனர். (03-09 ஸ்ரீ)

### நோயாளர்களும்...

ஆண் நோயாளர்கள் விடுதியில் கட்டில் ஓரமாக அமைந்திருந்த சுவர்ப்பகுதியில் ரவைகளின் தாக்குதலில் ஏற்பட்ட துவாரங்களைக் காணக் கூடியதாகவுள்ளது. தெய்வாதினமாக நோயரளர் கட்கு எதுவித காயங்களும் ஏற்படவில்லை. (23-ஸ்ரீ)

### நல்லூரில்

வெடித்தது இதில் குறிப்பிடும்படியானசேதம்எதுவும்ஏற்படவில்லை.

மீண்டும் மாலை 6 மணியளவில் மாநகர சபைக் கட்டடத்தில் நடாத்தப்பட்ட குண்டு வீச்சில் மாநகரசபைக்குச் சொந்தமான 3 லொறிகளும் ஒரு உழவு யந்திரமும் சேதத்திற்குள்ளாகின.(71-ஸ்ரீ

### சரமாரியான...

வழியாகச் சென்றது . வேட்டுக்கள் எங்கும் சிதறி வெடித்தன.

வீதிகளில் வந்தோர் சிதறி ஓடினார்கள். வீடுகளில் இருந்தோர் பதுங்கு குழிகளிலும் பாதுகாப்பு இடங்களிலும் பதுங்கினார்கள் (ப. 10-ஸ்ரீ)

### நாவாந்துறை

இருபதுக்கும் மேற்பட்ட குடிசைகள் முற்றாகச் சேதமடைந்தன. இத்தாக்குதல்களின்போதுமக்கள் பாதுகாப்பான இடங்களில்இருந்தமையினால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (ஸ்ரீ)

### 40 பொது மக்கள்...

பட்டதாக கொழும்பில் டெலோ பிரமுகர் ஒருவர் தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது, இதே சமயம் ஆறு தமிழ்க்குழுக்கள் முஸ்லிம் மக்கள் கொலை தொடர்பாக முஸ்லிம் காங்கிரசுடன் நேற்று பேச்சுக்கள் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (து-ஸ்ரீ)

## 'மாணவர்களின் கவனத்திற்கு'

அனைத்துப் பாடசாலைகளையும் சேர்ந்த விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு (9-ம் திகதி) கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு. சமுகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ( (து)

### பெரிய கல்லாறில்

# இருபத்தாறு இளைஞர்கள் ராணுவத்தால்சுட்டுக்கொலை

கல்முனை இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் பெரிய கல்லாறுப் பகுதியில் உள்ள இளைஞர்களை சுற்றிவளைத்ததாக விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

இச் சுற்றிவளைப்பையடுத்து களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் 26 இளைஞர்களை சுட்டுக் கொலை செய்துள்ளதாகவும் 6 பேரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றதாகவும் அச் செய்திக் குறிப்பு மேலும்தெரிவிக்கின்றது. (03ஸ்ரீ)

## முற்றத்தில் முடிந்த முடிவு

நேற்று முன்தினம் நள்ளிரவு திருநெல்வேலிப் பகுதியில் ஹெலி நடாத்திய ரொக்கட் தாக்குதலில் பல்கலைக்கழக பின்வீதியிலுள்ள வீட்டில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

ஹெலி தாக்குதல் நடாத்திக்கொண்டிருந்தபோது இவர் வீட்டு முற்றத்தில் இருந்த சமயம் இவரின் அருகில் வீழ்ந்த ரொக்கட் ஒன்றினால் இவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். இவர் அருகில் நின்ற இளைஞர் காயமடைந்தார். ஸ்ரீ

### புலிகள் வெற்றிக்காக

# விநாயகராலயத்தில் விசேட பூசை, கோப்பாயில் ஏற்பாடு

விடுதலைப்புலிகளுக்கு வெற்றி வேண்டியும் நாட்டில் அமைதி வேண்டியும், கோப்பாய் மத்தி வெள்ளெளுவைப் பிள்ளையார் வடக்கு சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயங்களில் தினமும் விசேட பூசைகளும், கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்று வருகின்றன.

கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலும் அருள் வேண்டி இன்று ஆயிரத்து எட்டு சங்கு சாத்தி சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளைஆலய பரிபாலன சபையார் மேற் கொண்டுள்ளனர். (23-ஸ்ரீ

# 285 தபால் பொதிகள் வந்தன; இன்றுமுதல் விநியோகம்

கொழும்பில் தேங்கியிருந்த 285 தபால் பொதிகள் யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டன.

நேற்று யாழ். பிரதம தபாலகத்தில் தபால்களை தரம் பிரிக்கும் வேலைகளும் குடாநாட்டு தபாலகங்களுக்கான தபால் பொதிகளை சைக்கிள் மூலம் அனுப்பி வைக்கும் வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் விமானத்தாக்குதல் இடம் பெற்றதனால் அங்கு தொடர்ந்து வேலைகள் நடைபெறவில்லை.

இதேவேளை குடாநாட்டு தபாலகங்களுக்கு இன்று தபால் பொதிகளை அனுப்பும் வேலைகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று யாழ்ப்பாணப்பகுதியில் நிலைமை சீராகவிருந்தால் வெளியூர், உள்ளூர் தபால் விநியோகசேவைகள் நடைபெறவிருப்பதாகவும் தபால் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (33-கி)

## உப்பாறுநோக்கிச் ஷெல்

தம்பலகாமம், கிண்ணியா, வானாறு ஆகிய இராணுவ முகாம்களில் உள்ள இராணுவத்தினர் உப்பாறு என்னும் கிராமத்தின் மீது பாரிய ஷெல் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் தங்கராஜா செல்வமலர் (22) என்பவர் பலியாகியுள்ளார். பத்மநாதன் நாகேஸ்வரி(24),வேலுப்பிள்ளை சிறிவதி(35), சந்திரபாலா ரமேஸ் (2) ஆகியோர் படுகாயமடைந்ததாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (03-ஸ்ரீ)

## தாழங்குடியில் பவல் சேதம்

மட்டக்களப்பு ஆரையம்குடா இராணுவமுகாமில் இருந்து நேற்றுமுன்தினம் ஒன்பது வாகனங்களில் களுவாஞ்சிக்குடா இராணுவ முகாமுக்கு வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கண்ணிவெடித்தாக்குதலை மேற்கொண்டனர்.

தாழங்குடாவில் வைத்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் இராணுவத்தினரின் பவல்வாகனம் ஒன்று முற்றாகச் சேதமடைந்ததாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர். (03-ஸ்ரீ)

### குண்டு...

டன் மெல்வின் பெரேரா என்பவர் எழுதிய கட்டுரை மற்றும் இந்தியப்படை ஆகியவை குறித்த கட்டுரையும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. (33 ஸ்ரீ)

## கோட்டை வாசல் சேதம்

யாழ்.கோட்டைப்பகுதியில் நடைபெற்ற மோதல்களில் கோட்டையில் முகப்பு வாசல் பகுதி பலத்த சேதமடைந்துள்ளதாக நேற்றிரவு பி.பி.ஸி, தெரிவித்தது. (ஸ்ரீ)

### பட்டினிச்...

மாதமாக போக்குவரத்து வசதி எதுவுமில்லாத காரணத்தால் இவர்களுக்கு உணவுப் பொருட்கள் வந்து சேரவில்லை. கையிருப்பில் இருந்த உணவுப் பொருட்களும் முடிவடைந்துள்ளன. போக்குவரத்து வசதி எதுவுமில்லாத காரணத்தால் இவர்கள் பிடிக்கும் மீன் கருவாடு என்பனவற்றை சந்தைப்படுத்த முடியாத நிலைவியிலுள்ளனர். இந்நிலையில் தமது சொந்த ஊர்களுக்கும் செல்ல முடியாத நிலையிலுள்ளனர்.

இப்போதைய நிலை தொடர்ந்து நீடிக்குமானால் இவர்கள் மிக மோசமான பட்டினி நிலைக்கு தள்ளப்படுவார்கள் என அஞ்சப்படுகிறது. 18-ஸ்ரீ

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 08-08-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.